27 MAR 1997
உரிய நடவடிக்கைக்காக
ஆ...ளர்

செய்திப் பத்திரிகையாக பதிவு செய்யப்பட்டது



# உதயதாரகை

கிறிஸ்தவ வாரப் பத்திரிகை

மலர்: 158 ஆரம்பம்: 1841 வெள்ளிக்கிழமை 21 - 3 - 1997 இதழ்: 8

செய்திகள், கட்டுரைகள், கவிதைகள் அனுப்பப்பட வேண்டிய முகவரி:
ஆசிரியர்
உதயதாரகை
ஆதீனக் காரியாலயம்
வட்டுக்கோட்டை.

பொது சன நூலகம்
27 MAR 1997
மாநகராட்சி மன்றம்
யாழ்ப்பாணம்

# கர்த்தரிடத்திற்குத் திரும்புங்கள் நம்பிக்கையில் களி கூருங்கள்

## தென்னிந்திய திருச்சபை யாழ் அத்தியட்சாதீனம் 50வது வருடாந்தக் கூட்டத்தின் பேராயர் உரை



தென்னிந்திய திருச்சபையில் 50வது வருடாந்த கூட்டம் கடந்த பெப் 28ம் திகதி யாழ்ப்பாணக் கல்லூரி ஒட்லி மண்டபத்தில் தொடங்கி இரு நாட் கூட்டங்களாக நடைபெற்றது இக்கூட்டத்தொடரை ஆரம்பித்து வைத்து உரையாற்றும் பொழுது பேராயர் அதி. வண. கலாநிதி எஸ். ஜெபநேசன் ''கர்த்தரிடத்திற்கு திரும்புங்கள் நம்பிக்கையில் களிகூறுங்கள'' என்ற தலைப்பில் உரையாற்றினார். அவர் தொடர்ந்து கூறியதாவது;-

எமது சபா சங்கத்தின் 49வது கூட்டத் தொடரை 1996 ஆண்டு செப்டெம்பர் மாதம் 27ம் திகதி வட்டுக்கோட்டையில் நடாத்தினோம். நான்கு மாதங்களின் பின்னர் மீண்டும் வட்டுக்கோட்டையில் கூடியிருக்கிறோம். கடந்த நான்கு மாதங்களில் கர்த்தர் எமக்களித்த சொல்ல முடியாத ஈவுகளுக்காக அவருக்கு ஸ்தோத்திரம். கடந்த நான்கு மாதங்களில் புனருத்தாரன, புனர் நிர்மான வேலைகளை ஆரம்பித்துள்ளோம். பண்டத்தரிப்பு, காரைநகர், நாக்கனாவத்தை, கேல்வத்தை ஆகிய இடங்களிலே மீண்டும் ஆராதனைகளைத் தொடங்கியுள்ளோம். 'ரிவிரெச' நடவடிக்கை காரணமாகவன்னிப் பிராந்தியத்திற்கு சென்ற எமது இல்லத்தைச் சேர்ந்த 222 பிள்ளைகள் ஜனவரி மாதம் 2ம் திகதி யாழ்ப்பாணம் திரும்பினார்கள். இவர்களின் வருகையால் பல விடங்களில் மீண்டும் உற்சாகமும் கலகலப்பும் காணப்படுகின்றன சென்றமுறை நமது சபா சங்கக் கூட்டத்திற்கு குடாநட்டிலிருந்து மாத்திரம் பிரதிநிதிகள் வந்திருந்தார்கள். இன்று கிளிநொச்சி, மாங்குளம் மாவட்டங்களிலிருந்தும் பிரதிநிதிகள் வந்திருப்பது நமக்கு உவகை அளித்திருக்கிறது. இன்றைய நாளிலே நான் மூன்று விடயங்களைக் குறித்து பேசலாம் என்றெண்ணினேன். முதலாவதாக இந்த வருடம் கொண்டாடப்படவிருக்கும் தென்திந்திய திருச்சபையின் பொன் விழா, இரண்டாவதாக அடுத்த வருடம் ஆகஸ்ட் மாதம் சிம்பாவே நாட்டின தலைநகராகிய ஹறாறேயில் நடைபெறவிருக்கும் அகில உலக திருச்சபை மன்றில் 8 வது மகாநாடு, மூன்றாவதாக இன்னும் மூன்று வருடங்களில் நிகழவிருக்கும புதிய 1000 ஆண்டுகளின் ஆரம்பம். (2ம் பக்கம் பார்க்க)

### மெய்வல்லுநர் போட்டி

யாழ்ப்பாணக்கல்லூரி கனிஷ்ட பாடசாலை, சிரேஷ்ட பாடசாலை ஆகியவற்றில் மெய்வல்லுநா போட்டிகள் சிறப்பாக நடைபெற்றன. கனிஷ்ட பாடசாலை போட்டிகள் கடந்த 14-05-97வெள்ளிக்கிழமை மாலை 2. 00 மணிக்கு நடைபெற்றது. பிரதம விருந்தினராக யாழ்ப்பாணக்கல்லூரி முன்னாள் ஆங்கில பகுதி பொறுப்பாசிரியர் செல்வி செல்வமணி செல்வதுரை அவர்கள் கலந்து கொண்டார்கள். இதில் எபிரகாம் இல்லம் முதலாம் இடத்தையும் பிறவுன் இல்லம் இரண்டாம் இடத்தையும், கிட்ச்கொக் இல்லம் மூன்றாம் இடத்தையும், ஹேஸ்டிங்ஸ் இல்லம் நான்காம் இடத்யையும் பெற்றுக்கொண்டன

சிரேஷ்ட பாடசாலைவிளையாட்டுப் போட்டி 15-03-97 மாலை 2 மணிக்கு நடைபெற்றது. பிரதம விருந்தினராக உடுவில் மகளிர் கல்லூரி அதிபர் செல்வி டாக்டர் சி வி. செல்லையா அவர்கள் கலந்து சிறப்பித்தார்கள். இதில் முதலாம் இடத்தை பிறவுன் இல்லம், இரண்டாம் இடம் ஏபிரகாம்இல்லமும்,மூன்றாம் இடத்தை கிட்ச் கொக் இல்லமும், நான்காம் இடத்தை ஹேஸ்டிங் இல்லமும் பெற்றுக் கொண்டன. இப்போட்டிகளை புதிதாகப் பொறுப்பேற்றுள்ள விளையாட்டுத் துறைப் பொறுப்பாசிரியர் திரு .என் தத்பரானந்தன் அவர்கள் சிறப்பாக ஒழுங்கு செய்து நடாத்தினார்.

### வாலிபர் பாசறை

யாழ்ப்பாண மெதடிஸ்த திருச்சபையின் ஆதரவில் வாலிபர்குழுக்கான மூன்று நாள் பாசறை யாழ்ப்பாணக்கல்லூரியில் ஏப்பிரல் மாதம் 11ம் 12ம், 13ம் திகதிகளில் நடைபெறவிருக்கிறது. வதிவிடப் பாசறையாக நடை பெறும் இப் பாசறையில் எல்லாச் சபைகளையும் சேர்ந்த வாலிபர்களும் கலந்து கொள்ளுவதற்காக வாய்ப்பாக இதற்கு பூரண ஆதரவு வழங்குவதென்று யாழ்ப்பாணம் கிறிஸ்த ஒன்றியத்தினால் முடிவு செய்யப்பட்டது.

### V. T. C.

#### வட்டுக்கோட்டை

வட்டுக்கோட்டை V. T. C. நிலையத்தின் சான்றிதழ் வழங்கும் வைபவமும், பொருட் கண் காட்சியும் இன்று வெள்ளிக்கிழமை வட்டுக்கோட்டை V. T. C. நிலையத்தில் நடைபெறுகின்றது. பொருட் கண் காட்சியும் நாளை சனிக்கிழமை (22 03 97) காலை 8. 30 மணி முதல் 4. 30 மணி வரையும் தொடர்ந்தும் காண்பிக்கப் படும்.

### நவீலட் பாடசாலை முகாமையாளர்

இலங்கை அங்கிலிக்கன் திருச்சபையின் பாடசாலையின் ஆளுநர் சபையினால் கைதடி நவீல்ட் பாடசாலையின் முகாமையாளராக அருட்திரு ஜெபமோகன் ஜெபரத்தினம் அடிகளார் நியமனம் செய்யப்பட்டுள்ளார். இவர் தனது பொறுப்பை ஆளுநர் சபையின் தலைவர் கலாநிதி E. S. தேவசகாயம் அவர்களிடமிருந்து உத்தியோக பூர்வமாக பெற்றுக் கொண்டார்.

### தந்தை செல்வா விசேட ஆராதனை

தந்தை செல்வா என்று அன்போடு அழைக்கப்படும் S V. J செல்வநாயகம் அவர்களின் 100 வது ஆண்டு பிறந்த தினத்தையொட்டி விசேட ஆராதனையொன்றை சுண்டுக்குளி பரி. யோவான் ஆலயத்தில் மார்ச் மாதம் 31ம் திகதி திங்கட்கிழமை மாலை 3. 30 மணிக்கு நடாத்துவதென்று யாழ்ப்பாணம் கிறிஸ்தவ ஒன்றியத்தின் நிர்வாகசபைக் கூட்டத்தில் ஏகமனதாக தீர்மானிக்கப்பட்டது.

வைத்திய கலாநிதி C. இராசேந்திரா தலைமையில் நடைபெற்ற கூட்டத்தில் நினைவுப் பேருரையை நிகழ்த்த யாழ் கத்தோலிக்க திருச்சபையின் ஆயர் பேரருட்திரு தோமஸ் சவுந்தரநாயகம் ஆண்டகையையும் ஆராதனையில் அருளுரையை நிகழ்த்த தென்னிந்திய திருச்சபையின் முன்னாள் பேராயர் பேரருட் கலாநிதி D. J. அம்பலவாணர் ஆண்டகையையும் அழைப்பதென்று முடிவு செய்யப்பட்டது. கூட்டம் பரி யோவான் கல்லூரியில் ஹண்டி நூல் நிலைய மண்டபத்தில் நடைபெற்றது.

### இறையியற் கல்லூரியின் சுவிசேஷ பணி

இறையியற் கல்லூரி விரிவுரையாளர்களும், மாணவர்களும் இணைந்து ஞாயிற்றுக்கிழமை (16- 03- 97) மாலை அராலி சமாதானக்கோட்டை கிராமத்தில் சுவிசேஷ பிரபல்யத்தை எடுத்துக் கூறினர். பாடல்கள், செய்திகள் மூலம் கடவுளின் வார்த்தையை எடுத்துக் கூறியமை அக்கிராம மக்களுக்கு மிகுந்த உற்சாகத்தைக் கொடுத்தது.

### பாடசாலை விடுமுறை

முதலாந் தவணைக்காக பாடசாலைகள் ஏப்பிரல் மாதம் 10ம் திகதி மூடப்படும் என அரசாங்கம் அறிவித்துள்ளது. முதலாந் தவணை விடுமுறை பதினொராம் திகதி என முன்னர் அறிவிக்கப்பட்டிருந்தது தெரிந்ததே.

## திருச்சபை ஐக்கியத்தின் பொன் விழா ஆண்டு 1947 - 1997

# தென்னிந்திய...

ஒரு கால கட்டத்தின் பூர்த்தி அல்லது ஒரு நிறுவனத்தின் வரலாற்றிலே ஒருநிகழ்வு என்பனவெல்லாம் கருத்து மிக்கவை. கடந்து போன சம்பவங்களையெல்லாம் தொகுத்துப் பார்க்கவும், நிகழ் காலத்தைப் புரிந்து கொள்ளவும், வருங்காலத்தை எதிர் நோக்கவும் இப்படியான சந்தர்ப்பங்கள் துணை புரிகின்றன.

தென்னிந்திய திருச்சபைக்கும் யாழ்ப்பாண அத்தியட்சாதீனத்திற்கும் 1997ம் ஆண்டு செப்டெம்பர் மாதம் 27ம் திகதி 50 வருடங்கள் பூர்த்தியாகின்றன. இதனை கோலாகாலமாக கொண்டாட செனற் மகா சபையினர் நடவடிக்கை எடுத்து வருகின்றனர். செப்டெம்பர் மாதம் 26ம், 27ம், 28ம் திகதிகளில் சென்னை மாநகரில் கொண்டாட்டங்கள் நடைபெற விருக்கின்றன. யாழ்ப்பாண அத்தியட்சாதீனம் அமெரிக்க மிஷனரிமார் யாழ்ப்பாணத்திற்கு வந்த தினமாகிய அக்டோபர் மாதம் 15ம் திகதி இதனை யாழ்ப்பாணத்தில் கொண்டாடவிருக்கின்றனர்.

1987ம் ஆண்டு நமது சபாசங்கத்தின் 40வது ஆண்டு நிறைவை அனுசரித்த பொழுது பேராயர் டி. ஜே. அம்பலவாணர் அந்த சபாசங்கத்திலே இருந்த மூவர் 1947ம் ஆண்டு நடைபெற்ற சபாசங்க கூட்டத்திலும் இருந்தார் என்று குறிப்பிட்டார். அவர்களின் பெயர் பின்வருமாறு

பேராயர் சபாபதி குலேந்திரன்
வண ஜே. ஜே. இரத்தினராஜா
திரு எஸ். எஸ். செல்லத்துரை

இவர்கள் ஒருவருமே இப்பொழுது நம்மத்தியில் இல்லை. (திருபதி 'ருத் பங்கர்' அவர்கள் இப்பொழுது இருக்கின்றார் என்பது பின்னர் சுட்டிக் காட்டப்பட்டது)

1947ம் ஆண்டு தென்னிந்திய திருச்சபை 14 ஆதீனங்களையும் 9 லட்சம் மக்களையும் கொண்டதாக விளங்கியது. இன்று தென்னிந்தியத் திருச்சபையில் 21 ஆதீனங்கள் இருக்கின்றன. ஏறத்தாள 20 இலட்சம் மக்கள் இதில் அங்கத்துவம் வகிக்கின்றனர். தென்னிந்தியத் திருச்சபை நமக்குக் கிடைத்த ஒரு வரப்பிரசாதம். இதிலே எம்மைப் பங்குகொள்ளும்படி செய்த எல்லா திருச்சபை தலைவர்களையும் நாம் நன்றியுடன் நினைவு கூறுகின்றோம். 1983ம் ஆண்டிலிருந்து நாம் பலவிதமான நெருக்கடிகளுக்கும் சவால்களுக்கும் முகங்கொடுக்க வேண்டியவர்களாக இருந்தோம் இக்காலத்திலெல்லாம் எம்முடன் அன்பு பாராட்டி எம்மைச் சரிவரப் புரிந்து கொண்டவர்கள் தென்னிந்தியத் திருச்சபையின் செனற் மகா சபையும் எமது மிஷன் பங்காளிகளுமே என நாம் துணிந்து கூறலாம். கிறிஸ்துவின் சபை 2000 வருட வரலாற்றைக் கொண்டது. கோடானு கோடி மக்கள் கிறிஸ்துவின் சபையில் அங்கத்தவர்களாக இருக்கின்றனர். இந்தப் பாரிய அமைப்பிலே 20 இலட்சம் மக்களை மாத்திரம் கொண்ட ஒரு அமைப்பின் 50 வருடகால வரலாறு முக்கியமானதா? என்ற கேள்வி எழலாம். ஆனால் 1947ம் ஆண்டு செப்டெம்பர் மாதம் 27ம் திகதி சென்னையில் நடைபெற்ற நிகழ்ச்சி மாட்டின் லூதருடைய சீர்திருத்த இயக்கத்திற்குப் பின்னர் திருச்சபை வரலாற்றிலே ஏற்பட்ட முக்கியமான நிகழ்ச்சி என்று கருதப்படுகின்றது. திருச்சபை ஒன்றாயிருக்க வேண்டுமென்பதையும் திருச்சபையும் ஒன்றாயிருக்க முடியும் என்பதையும் இந்நிகழ்சி உணர்த்தியது. சபை ஆளுகை முறையைக் கொண்ட திருச்சபை உறுப்பினர்களும் பேராயர் ஆளுகை முறையைக் உறுப்பினர்களும் ஒரே அமைப்பின் கீழ் வந்தமை வரலாற்றில் நிகழ்ந்த ஒரு பெரும் நிகழ்ச்சியேயாகும். இந்த வருடம் நாம் கொண்டாட இருக்கும் பொன் விழா திருச்சபை ஐக்கியத்தின் அவசியத்தை வலியுறுத்தும் நிகழ்ச்சியாக விளங்கட்டும். 1998ம் ஆண்டு ஹறாறேயில் நடைபெற விருக்கும் 8வது மகா சபைக்கு

'கர்த்தரிடத்திற்குத் திரும்புங்கள் நம்பிக்கையில் களிகூறுங்கட்'.

என்பது மகுட வாக்கியம் ஆபிரிக்கா கிறிஸ்தவின் நற்செய்தியை வேண்டி நிற்கின்றது. ஒவ்வொரு வருடமும் ஆபிரிக்காவில் ஐந்து இலட்சம் மக்கள் கிறிஸ்தவ மதத்தை தழுவுகிறார்கள் என்றும் ஆனால் வட அமெரிக்காவிலும் ஐரோப்பாவிலும் அதற்குச் சற்றுக் கூடுதலான தொகையினர்சபையை விட்டு வெளியேறுகின்றனர் என்றும் கூறப்படுகின்றது. 2000 ஆண்டுகளுக்கு முன்னர் நமது இரட்சகர் திருச்சபையை ஸ்தாபித்த பொழுது ஏழை எளியவர்களின் திருச்சபையாகவே இருந்தது. ஆபிரிக்கா இரத்தம் தோய்ந்த நிலையில் இருக்கிறது மக்கள் ஆயிரக் கணக்கில் செத்து மடிகின்றனர். இவர்களுக்கே கிறிஸ்து அதிகம் தேவைப்படுகின்றார்.

> ''கர்த்தர் எளியவர்களின் விண்ணப்பத்தை கேட்கிறார், கட்டுண்ட தம்முடையவர்களைப் புறக்கணியார்.''

இன்று நாமும் உலகத் திருச்சபையின் எட்டாவது மகா சபையின் தியானப் பொருளை நமதாக்கிக் கொள்ள வேண்டியிருக்கிறது. ஆபிரிக்காவைப் போலவே நமது நாட்டிலும் இரத்தம் வடிந்து கொண்டிருக்கிறது. இத்தகைய சூழலிலே கர்த்தரிடத்தில் திரும்புங்கள் நம்பிக்கையில் களிகூறுங்கள்'' என்பது அர்த்தமுள்ள வசனமாக இருக்கிறது.

மூன்றாவதாக உலக வரலாற்றிலே 1000 வருடங்கதள முடித்து புதிய ஒரு 1000 வருடத்திற்குள் பிரவேசிப்பதற்கு இன்னும் மூன்று வருடங்கள் இருக்கின்றதென்பதனை நாம் கருத்திற் கொள்ள வேண்டும். கிறிஸ்து உலத்திற்கு வந்து 2000 ஆண்டுகள் பூர்த்தியாகின்றன. நாம் கடிதங்களிலும் ஆவணங்களிலும் திகதிகளைப் போடும் பொழுது கிறிஸ்துவின் வருகையை அறிக்கையிடுகின்றோம் ஆங்கிலத்திலே AD என்பது 'ANNO DOMINI' இது எமது ஆண்டவரின் வருடத்திலே என்று பொருள்படும், புதிய ஒரு 1000 வருடங்களுள் பிரவேசிப்பதற்கு எம்மைத் தயார் செய்து கொள்வது அவசியமாகும். 1000 வருடங்களுக்கு அதாவது கி. பி 1000 ஆண்டில் உலகம் எப்படி இருந்தது என்பதனை சிந்தித்து பார்ப்பது அவசியமாகும். கி. பி 1000 ஆண்டுகளில் ஐரோப்பாவில் பாப்பரசரின் அதிகாரம் உச்சகட்டத்தில் இருந்தது. கல்வி கலை கலாச்சாரம் என்பன யாவும் கிறிஸ்தவ மடாலயங்களை சுற்றியே இருந்தன. தென்னாசியாவிலே சோழப்பெரு மன்னனின் புகழ் உச்ச கட்டத்தை அடைந்திருந்தது. இஸ்லாமியரின் குதிரைப்படைகள் மின்னல் வேகத்தில் எங்கும் சென்று இஸ்லாம் பரப்புவதற்கு துணைபுரிந்து கொண்டிந்தன. 1000 வருடத்தில் எத்தனை மாறுதல்கள்? விஞ்ஞானத்தின் வியத்தகு முன்னேற்றங்கள் தேசிய இனங்களின் எழுச்சி, ஆசிய மதங்களில் புத்தெழுச்சி, உலகம் எங்கும் தலைவிரி தாடும் அடிப்படை வாதம் என்பனவெல்லாம் திருச்சபையின் நிலையில் பெரும் மாற்றங்களைக் கொண்டுவந்துள்ளன.

இத்தகைய பின்னணியில் தென்னிந்திய திருச்சபை யாழ்ப்பாண அத்தியட்சாதீனம் என்ன செய்யலாம் என்ன செய்ய வேண்டும் என்ற கேள்விகள் எழுகின்றன. எமது அத்தியட்சாதீனம் சிறியது. ஆனால் நாம் பலவிதமான சிறப்பு வாய்ந்தவர்கள். ஒடுக்கப்பட்ட மக்கள் மத்தியிலே ஒரு சிறுபான்மையினர். இவ்வேளையிலே எம்மைச் சூழவுள்ள மக்களுக்கு நாம் 'கர்தரிடத்திற்கு திரும்புங்கள்' நம்பிக்கையிலே களிகூருங்கள்' என்ற உண்மையை வலியுறுத்த வேண்டியவர்களாக இருக்கின்றோம். ஒடுக்கப்பட்டவர்களுக்கும் ஏழைகளுக்கு இதுவே நம்பிக்கை தரும் செய்தியாகும். 1000 வருடங்களுக்கு முன்னர் ஐரோப்பாவில் திருச்சபை இருந்த நிலை இன்று திருச்சபை இல்லாமல் இருக்கலாம். ஆனால் இயேசு கிறிஸ்து நேற்றும் இன்றும் எனறும் மாறாதவராதவராயிருக்கிறார். என்ற உண்மையை மற்றவர்களுக்குக் காட்டுவது அவசியம். எண்ணாகமத்திலும் யோசுவாவின் புஸ்தகத்திலும் 'காலேபின்' அனுபவத்தைப் பார்க்கிறோம். இவன் தூரதிஷ்டிக் கண்ணாடி கொண்டு முன்னர் நடைபெற்ற இறைவனின் ஆச்சரியமான வழி நடத்தல்களைப் பார்த்து தைரியமடைந்தான். ஆனால் மற்றைய 10 வேவுகாரரும் நிகழ் காலத்தில் இருந்த விஷயங்களை பூதக்கண்ணாடியினாலே பார்த்துப் பயம் அடைந்தார்கள். 'காலேபி'னுடைய துணிவுக்கு இன்னுமொரு காரணம் அவனுடைய நாற்றுப்பற்று. அவனுக்கு 'எபிரோன்' மீது ஒரு தணியாத பற்றுதல் இருந்தது. இதற்கு காரணம் அங்கு தனது மூதாதையரின் கல்லறைகள் இருந்தமையேயாகும்.

இன்று நமது நாட்டைவிட்டுச் செல்வந்தர்களும் வெளிநாட்டு தொடர்புள்ளவர்களும் வெளியேறிக் கொண்டேயிருக்கின்றனர். மேய்ப்பர்களும் திருச்சபையை விட்டு வெளிநாடுகளுக்கு செல்ல வேதனை அளிக்கும் விஷயமாகும் 'ரிவிரெச' நடவடிக்கைக்கு முன்னர் 8 இலட்சம் மக்கள் கொண்டதாக இருந்த யாழ்ப்பாணக் குடாநாட்டின் சனத்தொகை அதற்குப் பின்பு 4 இலட்சமாக குறைந்து விட்டமை பரிதாபத்திற்குரியதாகும். வாழ்விலும் தாழ்விலும்

(3ம் பக்கம் பார்க்க)

இயேசு அவர்களோடே கெத்செமனே எனப்பட்ட இடத்திற்கு வந்து சீஷர்களை நோக்கி நான் அங்கே போய் ஜெபம் பண்ணுமளவும் நீங்கள் இங்கே உட்கார்ந்திருங்கள் என்று சொல்லி:

பேதுருவையும் செபெதேயுவின் குமாரர் இருவரையும் கூட்டிக் கொண்டு போய் துக்கமடையவும் வியாகுலப் படவும் தொடங்கினார்- (மத்தேயு 26; 36)



இயேசையா பிளந்த ஆதிமலையே
மோச நாளில் உன்னில் ஒளிப்பேனே
பிஷப் கால்டுவெல்

எல்லோரையும் திருப்தி படுத்த நினைப்பவன், முதலை தன்னைக் கடைசியாகச் சாப்பிடும் என்ற நம்பிக்கையில் உணவிடுபவனாவான். சர் வின்ஸ்டன் சர்ச்சில்

# உதயதாரகை

## பரிசுத்த வாரம்

லெந்து காலத்தின் கடைசி வாரத்தில் பிரவேசிக்கின்றோம். வருகிற ஞாயிற்றுக் கிழமை குருத்தோலை ஞாயிறை அனுஷ்டிக்கிறோம். பெரிய வியாழன், பெரிய வெள்ளி, சனிக்கிழமை வரை பரிசுத்த வாரமாக அனுஷ்டிக்க ஆயத்தமாக இருக்கின்றோம்.

இயேசு கிறிஸ்துவின் ஊழியம் 3 1/2 வருட காலமாகும். அதாவது 180 வாரங்களின் ஊழியம். ஆனால் கடைசி வாரத்தின் சம்பவத்திற்கு பெரிய முக்கியத்துவம் கொடுக்கப்பட்டிருக்கிறது. பரிசுத்த வாரத்தில் சிலுவைக்கு முன் மனிதன் தரித்து, ஜெபத்துடன் தியானித்து அவன் செய்ய வேண்டிய பாகத்தை செய்யும் பொழுது அக்கினியின் ஞானஸ்நானத்திற் கூடாக ஆச்சரியமாக மறு ரூபம் அடைவதுடன் வல்லமையுடன் விளங்குவான்.

உலக வரலாற்றில் சிலுவை மரணம் அதிக பரிதாபமும் பயங்கரமுமான சம்பவமாக சித்தரிக்கப்படுகின்றது. இந்தப் பலிக்கு மனிதனே காரணமென்பதை மனுக்குலம் உணரவேண்டும். இந்தப் பரிசுத்த வாரத்தில் இயேசு கிறிஸ்துவின் பாடுகளையும், மரணத்தையும் சிந்தித்து அவற்றை மீட்டெடுத்துக் கொள்ளல் வேண்டும். கெத்சமனேயில் இயேசு பட்ட வியாகுலம், போர்ச்சேவகர்களின் கொடுமை, சிலுவையை கல்வாரியை நோக்கித் தூக்கிச் செல்லல் எல்லாமே நாம் பக்திபூர்வமாக ஏற்றுக்கொள்ளும் தருணமாகும், இவைகளை சிந்தித்து ஏற்றுக் கொள்ளும் போது விடுதலை கிடைக்கின்றது. இயேசுகிறிஸ்து தம்மைத் தாமே ஏகபலியாக ஒப்புக் கொடுத்து, இந்த மகத்தான விடுதலையை ஏற்படுத்தினார். இந்தப் பரிசுத்த வாரத்தில் கெத்சமனேக் கூடாகவும், கல்வாரிக் கூடாகவும் நாம் செல்லும் பொழுது இந்த விடுதலையைப் பெற்றுக் கொள்கின்றோம்.

இந்த உணர்வினை H. A. கிருஷ்ணபிள்ளை பின்வருமாறு பாடுகின்றார்:-

படிசாய்த்த பெரும்பாவப் பரஞ்சுமந்து பரமர்திரு
மடிசாய்த்த திருமேனி வதைத்திழிசெங் குருதியுக
முடிசாய்த்த பெருமானை மூதலகை தலை நசுக்கிக்
கொடிசாய்த்த கொற்றவனைக் குஞ்சின் மிசைக்
கண்டேனே

மூவினைக்கு மும்முதலாய் மும்முதலு மொரு முதலாந்
தேவினைக்கை தொழுதேத்துந் திரிகரண கத்தருந்தம்
நாவினைக் கொண்டேத்தரிய நல்லறத்தின் தனித்தாயைத்
தீவினைக்கோ ரருமருந்தைச் சிலுவைமிசைக் கண்டேனே.

# தவக்கால சிந்தனை

இந்த தவக்கால சிந்தனை எம்மிடம் வினாவுவது,

''கவலைப்படுகிறதினாலே உங்களில் எவன் தன் சரீர அளவோடு ஒரு முழத்தை கூட்டுவான்?' இக்காலம் கவலைப்பட்டுக் கொண்டிருக்கும் காலமல்ல... கருத்தோடு ஜெபிக்கும் காலம் ''உன்னிடத்தில் ஒரு குறையுண்டு, உனக்கு உண்டானவைகளையெல்லாம் விற்றுத் தரித்திரருக்கு கொடு அப்பொழுது பரலோகத்திலே உனக்கு பொக்கிஷம் உண்டாயிருக்கும்''

ஆம், எங்கள் பொக்ஷம் பரலோகத்தில் உண்டாயிருக்க, இந்தத தவக்காலத்தை தக்க முறையில் அனுஷ்டிப்போம் பிறனை நேசிப்போம்,

''தன் சிலுவையை சுமந்து கொண்டு எனக்குப் பின் செல்லாதவன் எனக்குச் சீஷனாயிருக்க மாட்டான்''

ஆம், நாம் எமக்கு முன்னே வருகின்ற துன்பங்களைக் கண்டு அஞ்சி ஒதுங்குவோமா? இல்லை, இறைவனின் சீஷராகும் பொருட்டு எம்மை சீர் செய்வோமா?

J. M. T. றொற்றிக்கோ
நம்பிக்கை இல்லம்.



இந்த விந்தை அன்புக்கீடாய்
என்ன காணிக்கை ஈந்திடுவேன்;
எந்த அருள் பொருள் ஈடாகும்?
என்னை முற்றிலும் உனக்களிக்கிறேன்.

# தென்னிந்திய...

பிறந்த நாட்டிலே இருந்து சேவை செய்யதே சிறப்பு

''அற்ற குளத்தில் அறுநீர்ப்
பறவை போல உற்றுழித்
தீவார் உறவல்லர் — அக்
குளத்திற் கொட்டியும்
ஆம்பலும் நெய்தலும்
போலவே ஒட்டி உறுவார்
உறவு''

(மூதுரை)

எமது மறைக்கல்வி சரியாக வழங்கப் படாததினாலே நமது பிள்ளைகள் உயர் கல்விக்கு ஏனைய மதங்களை கருவியாகக் கொள்வதற்கும் திருச்சபைக்குள் அடிப்படை வாதம் வளர்வதற்கும் காரணமாகின்றன. கந்தர் புரிப் பேராயர் 'ஜோர்ஜ் கேரி' ஒருமுறை 'எமக்கு அழிவுக்குமிடையில் ஒரு சந்ததி தான் இருக்கிறது' இளைய தலைமுறைக்கு எமது விசுவாசத்தை கற்பிக்காது விட்டால் இது நிச்சயமாக நிகழும்'' என்று குறிப்பிட்டார். நமது பெற்றோர்களுடைய காலத்தில் மறைக் கல்வியில் இருந்த ஆர்வம் இப்போது இல்லாது இருப்பது வேதனைக்குரிய விடயமாகும். இதனாலேயே சில பிள்ளைகள் அடிப்படைவாதிகளின் வலைக்குள் சிக்கி விடுகின்றனர்.

பரவசம் ஊட்டும் குழுவினர் வேதாகமத்திலே சில வசனங்களுக்கு நேரடியான அர்த்தத்தைக் கூறுகின்றனர். ''ஆனால் ''உன் கண் உனக்கு இடறலாக இருந்தால் அதைப் பிடுங்கி போடு'' போன்ற வசனங்களுற்கு மறைப் பொருள் உண்டு என்று சாதிப்பர். அது மட்டுமன்றி தமக்கு வாய்ப்பான வசனங்களை மட்டும் எடுத்து பிரசங்கிப்பதும் இடறலான வசனங்களை விட்டுவிடுவதும் அவர்களுடைய இயல்பாகும். திருமறையைப் படிப்பது மட்டுமன்றி எமது சமுதாயத்தையும் எமது சமுதாயத்தில் என்ன நடைபெறுகின்றதென்பதையும் நாம் அறிந்து கொள்ளவேண்டும். பேராயர் ''லெஸ்லி நியூபிகின்'' அவர்கள் மேல் நாட்டு இறையியல் சிந்தனையாளர்களைப் பற்றி படிப்பதிலேயே கவனம் செலுத்தப்படுகின்றது. ஆனால் நம்மைச் சூழ எழுகின்ற நாவல்கள், பத்திரிகைகள், திரைப்படங்கள் ஆகியவற்றினூடாகத்தான் பொது சன அபிப்பிராயம் உருவாகின்றது. அவற்றினை இரகித்துக் கொண்டால் தான் எமது கலாச்சாரத்திற்கு எமது நற்செய்தி முகம் கொடுப்பதாக அமையும்.

நமது மக்களிடையே அபிலாசைகளோடும் இலட்சியக் கனவுகளோடும் நாம் இணைந்து கொள்ளுவது அவசியமாகும். இன்று நாட்டு மக்கள் திக்குத் தெரியாத காட்டில் சமாதானத்தையும் நிம்மதியையும் தேடிக் களைத்து போய் விட்டார்கள்

'ஆகையால் நமக்குத் தெரிந்திருக்கிற படி இதுவரைக்கும் சர்வ சிருஷ்டியும் ஏகமாய்த் தரித்து பிரவச வேதனைப்படுகின்றது.'' (ரோமர் 8:22)

ஆகவே இன்றைய சூழலில் நாம் தொடர்ந்து அல்லற்படும் எமது மக்களுக்காக குரல் எழுப்புவது அவசியமாகிறது. இதனால் இப் பணியில் நமக்குப் பல எதிர்ப்புகள் ஏற்படலாம். பல அவதூறுகளுக்கு முகம் கொடுக்க வேண்டி வரலாம் ஆனால் கடவுள் நம்மை என்ன நோக்கத்திற்காக உலகில் வைத்தாரோ அதனை நாம் மறந்து விடலாகாது. விண்ணொளி நம்மை நள்ளிருளில நடத்துவார்:

நன்றி வணக்கம்.

# சிறார் சோலை



கிறிஸ்துகுறள் - "உம்முடைய வார்த்தை என் கால்களுக்குத் தீபமும் பாதைக்கு நல் வெளிச்சமுமாயி (ஜே.ரி)

### அன்பான தம்பி தங்கைகளே!

தீபேத்து தேசத்தில் ஒருவர் ஊழியம் செய்து வந்தார். கிறிஸ்தவ சமயத்தை விரும்பாத சிலர் "நீர் இங்கு இனியும் ஊழியம் செய்வீரேயாகில், உம்மை நாம் கொலை செய்யக் கூட அஞ்சமாட்டோம். இந்த நாட்டை விட்டே ஓடி விடும்" என பயமுறுத்தினார். ஆனால் எவ்வித பயமுறுத்தலுக்கும் அஞ்சாமல் அந்த ஊழியன் தன பணியை மேற்கொண்டு வந்தார். அவரைக் கொண்டு போய் தடியால் அடித்தனர் அவர்கள் அடித்த அடியால் அந்த ஊழியக்காரனின் தோற்பட்டை உரிந்து போயிற்று. ஆனால் அவரோ "நான் கிறிஸ்தவனாக மாற முன்பு சாத்தானின் பிடிக்குள் இருந்தேன் எனக்கு இது தேவைதான் என்னை நன்றாக அடியுங்கள்" என்றார். பின்பு ஒரு எரியும் திரவசம் ஒன்றை அவரது காயங்களில் கொண்டு வந்து தடவினார்கள் "நான் சாத்தானின் பிடிக்குள் இருந்த போது அவன் தந்த சோதனையின் எரிச்சலை விட இந்த எரிச்சல் பெரிதல்ல" என்று கூறி அதையும் தாங்கிக் கொண்டார். பின்பு அவரைக் கொண்டு போய் எரியும் நெருப்பில் போட்டார்கள். "இதற்காக நான் இறைவனைத் துதிக்கிறேன். இந்த அக்கினித் தழல்கள் என்னை சீக்கிரத்தில் இறையண்டை சேர்க்கும்" என மகிழ்வுடன் ரத்த சாட்சியாக மரணத்தினை ஏற்றுக்கொண்டார்.

பார்த்தீர்களா? இறைவனுக்காக நாமும் எதையும் தாங்கிக் கொள்ளும் சக்தி படைத்தவர்களாக மாறுவோமா?

சிந்திப்போமா? செயற்படுவோமா?

கர்த்தரின் ஆசி உங்களுடன் இருப்பதாக

✲ ✲ ✲ ✲ ✲ ✲

### சிறுவர் சிரிப்பு

அப்பா திடீரென்று ஏன் சமையல் குறிப்பை எடுத்து படிக்கிறாய்

அம்மா:- பால் பொங்கினதும் என்ன செய்வேண்டும் என்று தெரியவில்லையே அதுதான் (ஜே.ரி)

✲ ✲ ✲ ✲ ✲ ✲

### சென்றவாரப் புதிரின் விடை

யோசேப்பு

### இவ்வாரப் புதிர்

"பலன் கொண்டு திடமனதாயிறு; திகையாதே கலங்காதே நீ போகும் இடமெல்லாம் நான் உன்னோடே இருக்கிறேன்" என்று இறைவன் யாரிடம் கூறினார்? (சென்ற வாரப் புதிரின் விடையின் உச்சரிப்புடன் இந்த புதிரின் உச்சரிப்பு சிறிது பொருத்தமுடையது)

வேதத்தை புரட்டி விடையைத் தேடுங்கள் கண்டு பிடிக்க இயலாதவர்கள் அத்த இதழை புரட்டுங்கள்.

07- 02- 97 அன்று வெளிவந்த புதிருக்கான விடையை எழுதி அனுப்பயவர்கள்

க. யூடிற் சிவாஜினி பெண்கள் இல்லம் சாவகச்சேரி

லக்ஷிதா தேவானாந்தன், 31 கண்டி வீதி சாவகச்சேரி

21- 02- 97 அன்று வெளிவந்த புதிருக்கான விடையை எழுதி அனுப்பியவர்

வலன்டினா வக்சலா, பெண்கள் இல்லம் சாவகச்சேரி

இவர்களுக்கு தாரகை அண்ணாவின் வாழ்த்துக்கள்

சரி தம்பி தங்கைகளே—அடுத்த இதழில் சந்திப்போமா?

அதுவரை என்றென்றும் அன்புடன்

தாரகை அண்ணா

# 50வது

சென்ற இதழ் தொடர்ச்சி

### வாலிப பெண்கள் விடுதி

கொழும்பு வெள்ளவத்தையில் பசல் லேனில் அமைந்துள்ள வாலிப பெண்கள் விடுதியின் அடிக்கல் நாட்டும் விழா நிகழ்வு 4ம் திகதி நவம்பர் மாதம் 1994ம் ஆண்டில் அதிவண கலாநிதி D. J, அம்பலவாணரால் நடைபெற்றது. இவ விடுதி வைபவ ரீதியாக ஜூலை மாதம் 20ம் திகதி 1996ம் ஆண்டில் இலங்கைக்கான அமெரிக்க தூதுவர் திரு. பீட்டர் பூர்வே என்பவரால் திறந்து வைக்கப்பட்டது. பெருந்தொகை மக்கள் குழுமி இருக்க பேராயர் அதி. வண. கலாநிதி S. ஜெநேசன் அவர்களால் இவ் விடுதியை பிரதிஷ்டை செய்து வைத்தார்.

### Administrative Committee - Students' & Youth Hostel 39, Fussels Lane, Colombo 6

1. Treasurer, JDCSI – Chairaman / his proxy Manager
2. Bishop, JDCSI / his proxy Colombo Pastor
3. Mr. M. R. Selvarajah, Manager cum Treasurer
4. Mr. C. D. Chinnakone
5. The Rev. S. Jeyanesan
6. Mr. A. Gnanadas
7. Mrs. V. Rajaratnam
8. Miss Caroll Arulanantham
9. Mrs. Sri Pathmanathan

### இவ்விடுதியில் அறவிடப்படும் வாடகை விபரங்கள்

| | | |
|---|---|---|
| திறந்த மண்டபம் (Dormitory) | ரூபா 1000/- + 250/- = ரூபா 1250/- | (ஒருவருக்கு மட்டும்) |
| படுக்கையறை (Cubicles) (இருவர் தங்கக்கூடிய அளவு மட்டும்) | ரூபா 1250/- + ரூ 250/- = 1500/- | (ஒருவருக்கு மட்டும் |
| அறைகள் (Rooms) | ரூபா 1500/- + ரூ 250/- = 1750/- | (ஒருவருக்கு மட்டும்) |
| திரும்பப் பெறக் கூடிய முற்பணம் | ரூ 5000/- | (ஒருவருக்கு மட்டும்) |
| KNH அலுவலக அறை | ரூபா 4000/- | (ஒரு மாதம்) |
| KNH சமையலறையும், களஞ்சிய அறையும் | ரூ 5000/- | (ஒருவருக்கு) |
| KNH விரிவுரை அறை | ரூ 4500/- | (ஒரு மாதம்) |
| உதவி ஊழியர் | ரூ 3000/- | (ஒரு மாதம்) |
| விருந்தினர் | ரூ 150/- | (ஒரு நாள்) |
| ஊழியரின் தற்காலிய விஜயம் | ரூ 100/- | (ஒரு நாள்) |
| கேட்போர் கூடம் (Auditorium) 3 மணித்தியாளத்திற்கு | ரூ 3000/- ஒவ்வொரு மேலதிக மணித்தியாளத்திற்கு 500 ரூபா | |

பின்வரும் நிகழ்ச்சிகளை நடாத்துவதற்கு கேட்போர் கூட்டத்தைப் பயன்படுத்தலாம்:-

1 கருத்தரங்குகள், தொழிற்பட்டறை, (Work shops) வேதபடிப்பு
2 திருமணவைபவங்கள், வீடு திரும்புகிற நிகழ்ச்கி, நிச்சியார்த்தம் போன்ற வைபவங்கள்
3 தேசிய கிறிஸ்தவப் பேரவையில் அங்கம் வகிக்கும் திருச்சபைகளின் நடவடிக்கைகளும் ரோமன் கத்தோலிக்க மாநாடு நிகழ்ச்சிகளுக்கும்

பின்வரும் காரணங்களுக்காக கேட்போர் கூட்டத்தை (Auditoriam) பயன்படுத்த முடியாது

1 அரசியல் தொழிற் சங்க நடவடிக்கைகள்
2 ஏனைய சமயக் குழுக்களின் நடவடிக்கைகள்
3 மது பரிமாறப்படும் எத்தகைய நிகழ்வும்

காரணத்தை குறிப்படாமலே விடுதிக்கான விண்ணப்ப அனுமதியை மறுக்க விடுதி குழுவினருக்கு உரிமை வழங்கப்பட்டுள்ளது.

### C.L.S. கொழும்பு

வண A ஜெயகுமாரன் வண V.N தர்மகுலசிங்கம்

### C.T.S. சங்கம்

வண D. R. அம்பலவாணர் வண S, C. ஆணல்ட்

### யாழ்ப்பாணக் கல்லூரி ஆளுகைக் குழு

திரு C. ஜெயரத்தினம் (3 வருடங்கள்) திருமதி பவசிங்க 3 வருடங்கள்

### பிஷப் குலேந்திரன் அறநிதி கட்டளை குழு

பேராயர் (தலைவர்), முன்னாள் பேராயர், செயலாளர், திரு N. A விமலேந்திரன் செயலாளர் திரு G. இராஜநாயம் திருமதி K. பவசிங்கம் பொருளாளர் JDCSI

### சமூகப்பணி, அபிவிருத்தி பரிபாலனசபை

பேராயர், பொருளாளர், திட்டப் பணிப்பாளர் (கூட்டுநர்), வண எஸ். ஐ ஆனந்தராஜன், வண எஸ். என் லோறன்ஸ், வண ஏ.ஏ. போல், திருS. இரட்ணவேல், திரு A. ஜெயராஜன், வண A. V ஜேசுதாசன், திரு டட்டன் சோமசுந்தரம், திரு C.N செல்வரட்ணம்

### சுவிசேச பரிபாலனச்சபை

பேராயர், வண பி. ஆர் நவீந்திர அனுகூலன் (கூட்டுநர் யாழ் குடா) வண இ- என் லோறன்ஸ், (கூட்டுநர், ஆனையிறவுக் தெற்கே) வண S. C. ஆணல்ட், வண ஏ, வி இயேசுதாசன். வண. எஸ். ஐ ஆனந்தராஜன், வண V. இராஜ்குமார் தலைவர் W. F, திரு டி எஸ் சொலமன், திருமதி K. பவசிங்கம் திரு ஜி நடராஜா, செல்வி S. P. குலசிங்கம்.

### U. T. C பெங்களூர்

1 பேராயர்
2 வண S ஜெநேசன்

### C. I. S. R .S

வண. D. R. அம்பலவாணர்

இப்பத்திரிகை வடடுக்கோட்டை ஆதினக் காரியாலயத்தில் உள்ள அமெரிக்கன் இலங்கை மிஷன் அச்சகத்தில் உதயதாரகை முகாமையாளர் ஜி. நடராஜாவினால் 1997 ஆம் ஆண்டு மார்ச் 21 ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.